## பதிவு செய்யும் முறை

தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை - 2022 (TNGASA- 2022) என்பது இணையவழி விண்ணப்பப் பதிவு மற்றும் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்வதாக அமையும். விண்ணப்பத்திற்கானத் தகவல்களைப் பதிவு செய்தல், விருப்பமான கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கானப் பணத்தைச் செலுத்துதல், விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்தல் மற்றும் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்தல் ஆகிய அனைத்தும் இணையவழியாகவே நடத்தப்படும்.

கலந்தாய்வின் நடைமுறைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ள பின்வரும் படிகளைக் கொண்டுள்ளது:

1. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய தாங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம். இணையதள வசதி இல்லாதவர்கள், அருகிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிகளில் உள்ள மாணவர் சேர்க்கை உதவி மையம் **Admission Facilitation Center (AFC)-2022** மூலம் இதைச் செய்யலாம்.
2. பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளை விருப்பப்படி பதிவு செய்தல்.
3. சான்றிதழைப் பதிவேற்றுவது தாங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதளம் வாயிலாகப் பதிவு செய்யலாம். இணையதள வசதி இல்லாதவர்கள், அருகிலுள்ள அரசு கலைக் கல்லூரிகளில் உள்ள மாணவர் சேர்க்கை உதவி மையம் **Admission Facilitation Center (AFC)-2022** மூலம் பதிவு செய்யலாம்.
4. தரவரிசை பட்டியல் அந்தந்த கல்லூரி வலைத்தளங்களில் வெளியிடப்படும். மூன்று தரவரிசை பட்டியல் உள்ளது அவை பின்வருமாறு:

   - **தமிழ் தரவரிசைப் பட்டியல்**

பன்னிரெண்டாம் வகுப்பில் பெற்ற தமிழ் மதிப்பெண்களின் அடிப்படையில் **தமிழ்** தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். இந்த பட்டியல் பி.ஏ. தமிழ் இலக்கியம் / பி.லிட். படிப்புகளின் சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படும்.

- **ஆங்கிலம் தரவரிசைப் பட்டியல்**

பன்னிரெண்டாம் வகுப்பில் ஆங்கிலத்தில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் **ஆங்கிலம்** தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். இந்த பட்டியல் பி.ஏ. ஆங்கில இலக்கியப் படிப்புகளின் சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படும்.

- **பொது தரவரிசை பட்டியல்**

மீதமுள்ள 4 பாடங்களின் அடிப்படையில் (400 மதிப்பெண்களில்) இது தயாரிக்கப்படும். இது மற்ற அனைத்து B.A. / B.Sc. / B.Com. / B.B.A. / B.C.A. / B.S.W படிப்புகளின் சேர்க்கைக்குப் பயன்படுத்தப்படும்.


5. விண்ணப்பதாரர்கள் தங்கள் பதிவு செய்த பாடப்பிரிவுகளின்விருப்ப வரிசையின் அடிப்படையில் தரவரிசைக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு ஆணை அந்தந்த கல்லூரிகள் வழங்கும்.
6. விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு வழங்க பட்ட ஒதுக்கீடு ஆணையின் அடிப்படையில் அந்தந்த கல்லூரிகளுக்குச் சென்று சேர்க்கையை உறுதி செய்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் மேலே உள்ள எல்லா விவரங்களையும் அவை செய்யப்பட வேண்டிய நாட்களையும் உரிய நேரத்தில் கவனித்து செயல்பட வேண்டும். எல்லாவற்றுக்குமான முதற்படி, விண்ணப்பத்தைப் பதிவு செய்தல். அதை எவ்வாறு செய்வது என்பதை இந்த குறிப்பு விவரிக்கிறது.

## 1. பயனாளர் பதிவு செய்தல்


இப்போது நாம் விண்ணப்பம் பதிவு செய்வது எப்படி என்று பார்க்கலாம்.பதிவு செய்தலை எளிதாக்க, அது பல எளிய படிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படிகளைக் கவனமாகத் தொடருங்கள். முதலாவதாக www.tngasa.in மற்றும்

www.tngasa.org . என்ற இணையதளத்திற்குச் செல்லவும். தற்பொழுது நீங்கள் கீழே காணும் கணினி பக்கத்தைக் காண்பீர்கள்.




இப்போது **"New Registration"** என்பதைக் கிளிக் செய்யவும். இப்போது கீழ்க்காணும் இணையப்பக்கம் கணினித்திரையில் தோன்றும்.

இப்போது கீழ்க்காணும் இணையப்பக்கம் கணினித்திரையில் தோன்றும். அதில் **"Registration"** என்ற பகுதியில் செய்ய வேண்டிய செயல் என்ன என்பதைத் தற்போது காட்டுகிறது.




விண்ணப்பப் பதிவு பயனாளர் பதிவுக்கான விவரங்கள் பதிவிடல் மேற்கண்ட இணையப் பக்கத்தில் உள்ள எல்லா விவரங்களையும் சரியாகப் பதிவு செய்யவும். விவரங்களைப் பதிவு செய்கையில் கீழ்க்கண்டவற்றை மனதில் கொள்ளவும்.


1. உங்கள் பெயரை, உங்கள் பத்தாம் வகுப்பு /+2 மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போல பதிவு செய்யவும்
2. கொடுக்கப்பட்ட திறன்பேசி **(Smart Phone)** எண், உங்கள் பதிவு செய்யப்பட திறன்பேசி எண்ணாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லா குறுந்தகவல்களும் அனுப்பப்படும்.
3. மின்னஞ்சல் முகவரி என்பதில் உங்களது சரியான மின்னஞ்சல் முகவரியைக் **(email Id)** கொடுக்கவும். உங்களுக்கான மின்னஞ்சல் முகவரி இல்லாவிட்டால் புதிதாக ஒன்றை உருவாக்கி, பின் பதியவும். மின்னஞ்சல் முகவரி உருவாக்குவதில் சிரமம் இருந்தால் உங்கள் பெற்றோரின் மின்னஞ்சலைப் பயன்படுத்தலாம். இந்த மின்னஞ்சல் முகவரியே உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லாத் தகவல்களும் அனுப்பப்படும்.
4. உங்களது கடவுச்சொல்லைக் **(Password)** கவனமாக உருவாக்கிக் கொள்ளவும். கடவுச் சொல்லானது குறைந்தது ஆறு எழுத்துகளைக் கொண்டது. அதில் குறைந்தது ஒரு எழுத்து எண்ணாகவும், ஒரு எழூத்து சிறப்பு எழுத்தாகவும் **(Special Character)** மற்றவைஎழுத்தாகவும் **(Letter)** இருக்க வேண்டும்.
5. இங்கு கொடுக்கப்பட்ட விவரங்களைப் பின்னர் மாற்ற இயலாது. எனவே உறுதி செய்வதற்கு முன் சரிபார்த்து உறுதி செய்யவும்.

உங்கள் மின்னஞ்சல் **(Email id),** மற்றும் கடவுச்சொல் **(Password)** ஆகியவற்றைக் கவனமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றை நீங்கள் பலதடவை பயன்படுத்த வேண்டியிருக்கும். பத்திரமாக எங்காவது எழுதிவைத்தாலும் நலம்.


இந்த விவரங்களை முடித்த பின் **"Submit"** என்ற பட்டனைக் கிளிக் செய்யவும். அப்பொழுது உங்கள் திறன்பேசிக்கு **(Smart Phone)** வரும், ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொல் **(OTP)** எண்ணைப் பதிவு செய்யவும், இதில் **“Submit"** என்பதைக் கிளிக் செய்யவும். திரையில் உங்கள் விண்ணபப்படிவ எண் தோன்றும் அதில் உள்ள **“login”** பட்டனைக் கிளிக் செய்யவேண்டும்.




தற்போது தங்கள் பதிவு செய்த திறன்பேசி **(Smart Phone)** எண்ணுக்கு மின்னஞ்சல் முகவரி **(Email Id)** மற்றும் கடவுச்சொல் குறுந்தகவலாக அனுப்பப்படும். இனி நீங்கள் எப்போது வேண்டுமாயினும் **TNGASA** இணையதளத்தில் உங்கள் மின்னஞ்சல் முகவரி **(Email Id)** மற்றும் கடவுச்சொல்லை **(Password)** பயன்படுத்தி உள்நுழைவு **(Login)** செய்து கொள்ளலாம்.




இப்பொழுது உள்நுழைவு **(Login)** செய்தால் கீழ்க்கண்ட கணினி திரைத் தோன்றும்.



தற்போது விண்ணப்பம் பதிவு செய்தலுக்கான முதல் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.


## 2. விண்ணப்பம் பதிவு செய்தல்

தற்பொழுது **“Application”** தேர்வுசெய்யவும். தற்போது விண்ணப்பப் படிவப் பதிவுக்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும். விண்ணப்பப் படிவப் பதிவு நான்கு எளிய படி நிலைகளைக் கொண்டது, அவை பின்வருமாறு:

- தனிப்பட்டவிவரங்களைப் பதிவு செய்தல்
- சிறப்பு பிரிவிற்கான விவரங்களைப் பதிவு செய்தல்
- கல்வித்தகுதி விவரங்களைப் பதிவு செய்தல்
- மதிபெண்கள் விவரங்களைப் பதிவு செய்தல்


**தனிப்பட்ட விவரங்களை பதிவு செய்தல்.**

- மாணாக்கர் பெயர், பெற்றோர் / பாதுகாவலர் பெயர், பாலினம், பிறந்த தேதி, தேசியம், மாநிலம், மாவட்டம், மதம், இனம், சாதியின் உட்பிரிவு, மாணாக்கர் முகவரியினைக் கட்டாயமாகப் பிழையின்றிப் பதிவு செய்ய வேண்டும்.



**சிறப்பு பிரிவிற்கான விவரங்களைப் பதிவு செய்தல்.**

- மாற்றுத்திறனாளிகள் / விளையாட்டுப் பிரிவினர்கள் / முன்னாள் ராணுவ வீரர்கள் / தேசிய மாணவர் படை / அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தைச் சார்ந்தவர்கள்/ முதல் பட்டதாரி மாணவர்கள் போன்ற பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தேவையானவற்றைத் தேர்வு செய்ய வேண்டும்


Application Form
Special Reservation Information
Application No : 12

Differently Abled(Yes / No)
மாற்றுத்திறனாளி(ஆம் / இல்லை)
Select Any Option

Select Disabilities
எத்தகைய மாற்றுத்திறன்
Select Any Option

Mention % of Disability
மாற்றுத்திறன் % குறிப்பிடவும்
0

Eminent Sports Person
சிறந்த விளையாட்டு நபர்
Select Any Option

Level of Participation
பங்கேற்பு நிலை
Select Sport

Are you a Son/Daughter of Ex-Serviceman ?(Only Army/Navy/Air-Force Services alone are Eligible)
நீங்கள் முன்னாள் ராணுவ வீரரின் மகன்/மகளா ? (இராணுவம்/கப்பற்படை/விமானப்படை சேவைகள் மட்டுமே தகுதியுடையவை)
Select Any Option

NCC (A) Certificate Holder
என்.சி.சி (ஏ) சான்றிதழ் வைத்திருப்பவர்
Select Any Option

Tamil Origin from Andaman & Nicobar Island
அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவரா ?
Select Any Option


Are you first in your family to join Under-Graduate Course?
உங்கள் குடும்பத்தில் முதன் முதலில் பட்டதாரி படிப்பில் சேருவது நீங்கள்தானா?
Select Any Option

← Personal Information
தனிப்பட்ட தகவல்

Continue
தொடரவும்

**கல்வித்தகுதி விவரங்களைப் பதிவு செய்தல்**

- பன்னிரெண்டாம் (+2) வகுப்பின் பதிவு எண்ணைப் பிழையில்லாமல் உள்ளீடு செய்ய வேண்டும்.
- பதினொன்றாம் (+1) வகுப்பில் தேர்ச்சியைப் பதிவு செய்ய வேண்டும்.
- பன்னிரெண்டாம் வகுப்பில் படித்த முதன்மை மொழியினைத் தேர்வு செய்ய வேண்டும்.
- பன்னிரெண்டாம் வகுப்பில் (+2 ) எந்த வாரியத்தின் கீழ் படித்தீர்கள் என்பதைப் பதிவு செய்ய வேண்டும்.
- பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற வருடம்
- பன்னிரெண்டாம் வகுப்பில் படித்தப் பாடப்பிரிவின் குறியீடு
- பன்னிரெண்டாம் வகுப்பில் படித்த பாடப்பிரிவின் வகை (Academic or Vocational)



Application Form

Academic Information

Application No : 12

HSc Permanent Register Number
நிரந்தரப் பதிவு எண்
1323232

Qualifying Examination
தகுதித் தேர்வு
HSC

Whether +1 Pass
+1 தேர்ச்சி
Yes

Medium of Study in HSC
பயிற்று மொழிப்பாடம்
English

Board
வாரியம்
Tamil Nadu Board of Higher Secondary Education, Chennai

+2 Passed out Year
+2 தேர்ச்சி பெற்ற ஆண்டு
2022

Group Code
குழு குறியீடு
2501

2501 - Group Code Details

| | |
|---|---|
| Subject1 | Physics |
| Subject2 | Chemistry |
| Subject3 | Statistics |
| Subject4 | Mathematics |

HSC Group
கல்வி முறை
HSC Academic

←Special Reservation
சிறப்பு இட ஒதுக்கீடு

Continue
தொடரவும்

பாடப்பிரிவின் குறியீடு விவரங்களை உங்கள் பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் அல்லது TNGASA வலைத்தளதில் உள்ள HSC Group ல் காணலாம், நீங்கள் பாடப்பிரிவின் வகையைத் (Academic or Vocational) தேர்ந்தெடுக்க வேண்டும். 2020 க்குப் பிறகு நீங்கள் தேர்ச்சிப் பெற்றிருந்தால், இந்த புலம் நிரப்பப்பட வேண்டியதில்லை.

**மதிப்பெண்கள் விவரங்களைப் பதிவு செய்தல்**

பன்னிரெண்டாம் வகுப்பில் **(+2 HSC)**யில் நீங்கள் பெற்ற பாடங்களுக்கான மதிப்பெண்கள் அல்லது வேறு வாரியங்களில் படித்த மாணாக்கர்கள் **+2 (HSC)**க்கு சமமானப் பாடங்களில் நீங்கள் பெற்ற மதிப்பெண்களைச் சமர்ப்பிக்கலாம்.

3A Personal Information — 3B Special Reservation — 3C Academic Information — 3D Marks Entry

## Application Form

**Marks Entry** | **Application No : 105192**

| S.No | Language<br>மொழிப்பாடம் | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 1 | Tamil | 01 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 99 | July 2020 | 1 |

| S.No | English<br>ஆங்கிலம் | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 2 | English | 09 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 99 | July 2020 | 1 |

| S.No | Subject 1<br>பாடம் 1 | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 3 | Statistics | 13 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 87 | July 2020 | 1 |

| S.No | Subject 2<br>பாடம் 2 | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 4 | Commerce | 25 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 96 | July 2020 | 1 |

| S.No | Subject 3<br>பாடம் 3 | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 5 | Accountancy | 26 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 98 | July 2020 | 1 |

| S.No | Subject 4<br>பாடம் 4 | Subject Code<br>பாடக் குறியீடு | Register No<br>பதிவு எண் |
|---|---|---|---|
| 6 | Economics | 24 | 123456 |

| Maximum Marks<br>அதிகபட்ச மதிப்பெண்கள் | Obtained Marks<br>பெறப்பட்ட மதிப்பெண்கள் | MMM/YYYY of Passing<br>தேர்ச்சி பெற்ற மாதம்/வருடம் | No.of.Attempts<br>முயற்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 100 | 96 | July 2020 | 1 |


+2 (HSC) Total : **575** | Tamil : **99.0** | English : **99.0** | General Aggregate : **377**

← Academic Information
கல்வி தகவல்

Preview & Submit
சரிபார்த்து சமர்ப்பிக்க

அனைத்து விவரங்களையும் பதிவு செய்த பின் **"Preview & Submit"** பட்டனைக் கிளிக் செய்ய வேண்டும். அப்போது பதிவு செய்யப்பட அனைத்து விவரங்களைக் கொண்ட முன்னோட்டத் திரை தோன்றும்.

அதில் பெயர், பாலினம், பிறந்ததேதி, இனம், **+2** பாடப்பிரிவு, கல்வி விவரங்கள், மற்றும் சிறப்பு பிரிவிற்கான விவரங்கள் அனைத்தையும் நன்றாகச் சரிபார்த்து பின்பு, அனைத்து தேர்வுப் பெட்டிகளையும் ☑டிக் செய்ய வேண்டும். பிழை இருப்பின் **"Back to Edit"** என்னும் பட்டனை கிளிக் செய்து பிழைகளை சரி செய்து பின் **"Final Submission"** பட்டனைக் கிளிக் செய்யலாம் அல்லது பிழையில்லையெனில் நேரடியாக **"Final Submission"** பட்டனைக் கிளிக் செய்யலாம்.



**Application Preview**

**Personal Information / தனிப்பட்ட தகவல்**

| | |
|---|---|
| Name | Sukumar P |
| Father Name | PALANISAMY R |
| Gender | Male |
| DOB | 2005-06-10 |
| Address | Dahanalakshmi Nagar,Siddhapudur |
| State | Tamilnadu |
| District | Coimbatore |
| Pincode | 641044 |

| | |
|---|---|
| Mobile | 96[redacted] |
| Email Id | tngasa.2020@gmail.com |
| Register No. | 123456 |
| Religion | Hindu |
| Nationality | Indian |
| Community | SCA |
| HSC Group | HSC Academic |
| Medium of Study in HSC | Tamil |

**Marks Information / மதிப்பெண் தகவல்**

| Subject | Max Marks | Obt Marks | Attempts |
|---|---|---|---|
| Tamil | 100 | 99 | 1 |
| English | 100 | 99 | 1 |
| Statistics | 100 | 87 | 1 |
| Commerce | 100 | 96 | 1 |
| Accountancy | 100 | 98 | 1 |
| Economics | 100 | 96 | 1 |
| Total Marks | | 575 | |

**Special Reservation Information / சிறப்பு இட ஒதுக்கீடு**

| | |
|---|---|
| Differently Abled | No |
| Disabilities Type | - |
| % of Disability | - |
| Sports Person | No |
| Level of Participation | |
| Children of Ex-Service men? | No |
| Origin | Yes |
| NCC (A) Certificate Holder | No |

**Particulars Checklist to be Verified / சரிபார்க்க வேண்டிய விவரங்கள் சரிபார்ப்பு பட்டியல்**

Kindly verify all the particulars listed below carefully, after final submission changes cannot be made./ இதை பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் கவனமாக சரிபார்க்கவும் சமர்ப்பித்த பிறகு எந்த. மாற்றமும் செய்ய இயலாது.

(**Please tick respective check box, after verification** / **சரிபார்ப்பிற்குப் பிறகு, அந்தந்த தேர்வுப்பெட்டியைத் டிக் செய்யவும்**)

- Name/பெயர்
- Gender/பாலினம்
- DOB/பிறந்த தேதி
- Community/சமூகம்
- HSC Group/எச்.எஸ்.சி குழு
- Register No/பதிவு எண்
- Academic Details/கல்வித் தகவல்
- Special Reservation Details/சிறப்பு இட ஒதுக்கீடு தகவல்

**Declaration/அறிவித்தல்**


I hereby declare that all the particulars given by me in this form are true to the best of my knowledge and belief and any mistake / misinformation, detected at the time of admission or at any stage in future, will result in the cancellation of admission/candidature. I have read the information bulletin and understood all the procedures. In case I furnish any false information, my result will not be declared/ my candidature will automatically stand cancelled. I shall abide by terms and conditions therein.

இந்த படிவத்தில் நான் வழங்கிய அனைத்து விவரங்களும் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சரியானவை எனவும், சேர்க்கை நேரத்தில் அல்லது எதிர்காலத்தில் எந்த கட்டத்திலும் கண்டறியப்பட்ட எந்தவொரு தவறு / தவறான தகவலால் எனது சேர்க்கை/விண்ணப்பம் ரத்து செய்யப்படும். நான் தகவல் கையேடு படித்து அனைத்து நடைமுறைகளையும் புரிந்து கொண்டேன். நான் ஏதேனும் தவறான தகவல்களை வழங்கினால், எனது முடிவு அறிவிக்கப்படாது / எனது விண்ணப்பம் தானாகவே ரத்து செய்யப்படும். அனைத்து விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் நான் கட்டுப்படுவேன்.

I have read and agree to the Terms and Conditions /நான் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து ஒப்புக்கொள்கிறேன்

Final Submission/இறுதி சமர்ப்பிப்பு | Back to Edit


உங்களது விண்ணப்பத்தில் உள்ள **“Final Submission”** சமர்ப்பித்துவிட்டால் விவரங்களை மாற்றம் செய்ய இயலாது.





தற்போது விண்ணப்பப்படிவப் பதிவுக்கான இரண்டாம் படிநிலை நிறைவடைந்துள்ளது.

### 3. பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளைத் தேர்வு செய்தல்

தற்பொழுது **“College and Course Selection”** என்பதைத் தேர்வு செய்யவும்.




தற்போது பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளைத் தேர்வு செய்வதற்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும்.





கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்வது என்பது மிக முக்கியமான படி நிலைகளில் ஒன்று. மாணாக்கர்கள் தேர்வு செய்யும் முதல் விருப்பமானது முதன்மை விருப்பமாக இட ஒதுக்கீட்டின் போது கருதப்படும். ஆதலால், மிகுந்த கவனத்துடன் தேந்தெடுக்க வேண்டும்.

கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்யும் எளிய படி நிலைகள் பின்வருமாறு:

1. படிக்க விரும்பும் மாவட்டத்தைத் தேர்வு செய்ய **"College District"** என்பதை கிளிக் செய்ய வேண்டும்.
2. அடுத்தாக படிக்க விரும்பும் கல்லூரியைத் தேர்வு செய்ய **"College Code &Name"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.
3. படிக்க விரும்பும் பயிற்று மொழியைத் தேர்வு செய்ய **"Medium"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.
4. படிக்க விரும்பும் சுழற்சியைத் தேர்வு செய்ய **"Shift"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.


5. படிக்க விரும்பும் பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்ய **"Course Name"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும். பாடப்பிரிவுகளின் பெயர்கள் வரிசையாகத் தோன்றும். அதில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும்.
6. புதிய பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்க மாணாக்கர்கள் **"Add Course"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும். ஒரு மாணாக்கர் எத்தனைப் பாடப்பிரிவை வேண்டுமென்றாலும் தேர்ந்தெடுக்கலாம்.
7. வேறு கல்லூரியில் படிக்க விரும்பும் மாணாக்கர்கள், தங்கள் திரையில் உள்ள **"Add College"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும். அதில் தோன்றும் மாவட்டம் மற்றும் கல்லூரியை விரும்பும் வகையில் எத்தனை முறை வேண்டுமென்றாலும் தேர்ந்தெடுக்கலாம். (ஒரு மாணாக்கர்கள் ஒரே பாடப்பிரிவை ஒரே கல்லூரியில் மீண்டும் தேர்ந்தெடுக்க இயலாது )
8. இறுதியாக **"Submit"** பட்டனை கிளிக் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.





தற்போது பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளைத் தேர்வு செய்யும் மூன்றாம் படிநிலை நிறைவடைந்ததுள்ளது.


## 4. பதிவு கட்டணம் பகுதி

தற்பொழுது **"Payment"** தேர்வுசெய்யவும்.




தற்போது பதிவுக் கட்டணத்திற்கான இணையதள பக்கம் தங்களது கணிணியில் தெரிய வரும்.



இதில் நீங்கள் கொடுத்த தகவலின்படி (பதிவுக் கட்டணத் தொகை) எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை காட்டும். இந்தத் தொகையை பற்று அட்டை **(Debit Card)** / கடன் அட்டை **(Credit Card)** / இணைய வழி வங்கிக் கணக்கு **(Internet Banking),** மற்றும் யுபிஐ (**UPI** யை தேர்ந்தெடுத்து **Google Pay, Paytm** வழியாக) மூலமாக செலுத்தவேண்டும், (விண்ணப்பக் கட்டணம் இணைய வழியாக மட்டுமே செலுத்த முடியும்). இதை செய்வதற்கு **"Pay"** என்பதை கிளிக் செய்யவும். பின்பு அதற்கான கட்டணம் செலுத்துவதற்கான வங்கியின் திரை **(Gateway)** உங்கள் கணினியில் தோன்றும்.

இதில், தொகையைச் செலுத்தி முடித்தவுடன் உங்கள் செல்பேசிக்கு விண்ணப்ப எண்ணும், பரிவர்த்தனை ஐடியும் அனுப்பப்படும், மேலும் பரிவர்த்தனை ரசீதை அச்சிட்டுக்கொள்ளலாம் **(Print).**


**Payment Receipt**


| | |
|---|---|
| **Application No.** | 10 |
| **Name of the Candidate** | SUKUMAR |
| **Email ID** | sugumarskp@gmail.com |
| **Mobile No.** | [redacted] |
| **Payment Status** | Success |
| **Payment Date** | 15-06-2022 17:14:43 |
| **Transaction ID** | 104350 |
| **Payment ID** | WHD41216274414 |
| **Paid Amount** | 00000002.00 |

மீண்டும் முகப்பு பக்கத்திற்கு செல்ல **Go to Home page** என்பதை கிளிக் செய்ய வேண்டும். தற்போது விண்ணப்பக் கட்டணம் பதிவு செய்தலுக்கான நான்காம் படிநிலை நிறைவடைந்துள்ளது.

## 5. விண்ணப்பப் படிவம் தரவிறக்கம் செய்தல்

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தப்பின் கீழ்க்காணும் திரை தோன்றும்.



**GOVERNMENT OF TAMIL NADU**
Tamil Nadu Government Arts and Science Colleges

**Application Number** :7242
**விண்ணப்ப எண்**

7242

**Personal Information**

| | | | |
|---|---|---|---|
| **Name** / பெயர் | | SUKUMAR | |
| **Father's/Guardian's Name** / தந்தையின் / பாதுகாப்பாளர் பெயர் | | PALANI | |
| **Gender** / பாலினம் | Male | **Date of Birth** / பிறந்த தேதி | 30-06-2005 |
| **Email Id** / மின்னஞ்சல் முகவரி | | skpcs@gmail.com | |
| **Mobile No** / கைப்பேசி எண் | 96[redacted] | **Nationality** / எந்த நாட்டைச் சேர்ந்தவர்? | Indian |
| **Religion** / மதம் | Hindu | **Community** / இனம் | SCA |
| **Caste Name & Caste Code** / சாதி பெயர் & சாதி குறியீடு | | Adi Andhra - 108 | |
| **Address for Communication** / முகவரி | | 60/82 Dhanalakshmi Nagar Huts,Siddhapudur | |
| **Taluk** / தாலுகா | North | **District** / மாவட்டம் | Coimbatore |
| **State** / மாநிலம் | Tamilnadu | **Pincode** / அஞ்சல் குறியீடு | 641044 |

**Special Reservation Information**

| | | | |
|---|---|---|---|
| **Whether you have Sports Certificates of District / Divisional / State/ National/ International?** / உங்களிடம் மாவட்ட / பிரிவு / மாநில / தேசிய / சர்வதேச விளையாட்டு சான்றிதழ்கள் உள்ளதா? | No | **Eminent Sports Person** / சிறந்த விளையாட்டு நபர் | No |
| **Ex-Servicemen (Only Army/Navy/ Air force services are Eligible)**/ முன்னாள் படைவீரர்கள் (தரைப்படை / கடற்படை / விமானப்படை சேவைகள் மட்டுமே தகுதியானவை) | No | **Differently Abled Person** / மாற்றுத்திறனாளி(ஆம் / இல்லை) | No |
| **Differently Abled Type** / மாற்றுத்திறனாளியின் வகை | Not Applicable | | |
| **Tamil Origin from Andaman & Nicobar Island** / அந்தமான் & நிக்கோபார் தீவுகளின் தமிழினத்தை சார்ந்தவரா ? | No | **NCC (A) Certificate Holder** / என்.சி.சி (ஏ) சான்றிதழ் வைத்திருப்பவர் | No |

இப்போது **"Download and print Application"** என்பதில் கிளிக் செய்தால், உங்கள் முழு விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்படும். இத்துடன் நீங்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டியது நிறைவு பெறும்.